அங்கே பொருளாதார நிலைமை காரணமாகப் பெண் மருத்து வர்கள் இல்லை. உதவியாளர்கள் இல்லை, போதிய படுக்கைகள் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட மருத்துவ மனைகள், தஞ்சை மாவட்டத்தில், தமிழ்நாட்டில் இருக்கின்றன என்பதை உணர்ந்து அவைகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அரசாங்கம் மருத்துவமனைகளை 'அக்வேர்' செய்வதில்லை. 'அக்விசிஷன்' செய்வதைப் போன்று செய்யவில்லை. மருத்துவமனைகளை நடத்து பவர்கள் தாங்கள் எந்தக் காரணத்தினால் அதை ஒழுங்காக நடத்த முடியவில்லை என்று அரசாங்கத்திற்குத் தெரிவித்து, ஆகவே, அரசாங்கம் அதை மேற்கொள்ள வேண்டுமென்று முறையாக விண்ணப்பித்தால் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளை எடுப்பது என்ற திட்டம் இருக்கிற இந்தச் சூழ்நிலையில் அப்படிப்பட்ட விண்ணப்பம் வருமானால் அரசாங்கம் எடுக்க முயற்சிக்கலாம். முயற்சிக்கலாம் என்றுதான் சொல்கிறேனே தவிர இது 'அஷ்யூரன்ஸ்' ஆகாது. ஆகவே, பரிசீலனை செய்யக்கூட அவர்கள் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள்.

*51 வினா—திரு. வ. முத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், எளச்சிபாளையம் ஒன்றியத்தில், பொதுச் சுகாதார நிலையம் கட்டும் செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சேலம் மாவட்டம் எளச்சிபாளையம் ஒன்றியத்திற்காக ஆரம்ப சுகாதார நிலையத்தை மாணிக்கம்பாளையம் ஊராட்சியில் அமைக்கும்படி அரசு 18—10—1974-ல் ஆணையிட்டது. இதன்படி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தற்காலிகக் கட்டடம் தேர்ந்தெடுக்கப்பட்டு 23—1—1975 முதல் அந்த நிலையம், மாணிக்கம்பாளையத்தில் செயற் பட்டு வருகிறது. நிரந்தரக் கட்டடங்கள் கட்ட 5 ஏக்கர் நிலமும் ரூபாய் பத்தாயிரம் நன்கொடையும் அளிக்க வேண்டும். இந்தத் தொகையும் இடமும் இன்னும் அளிக்கப்படவில்லை.